பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.30.12.2019

<u>நிகழும் திருவள்ளுவராண்டு டிசம்பர் மாதம் 31 ம் நாள் (31.12.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்</u>

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் டிசம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் டிசம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதார காம்பாக்டர் வாகனம் TN65 AY3116க்கு இரண்டு முன்புற டயர்கள் முற்றிலும் தேய்மானம் அடைந்து விட்டதால் வாகனம் அடிக்கடி பஞ்சராகி வாகனத்தை இயக்க முடியாத நிலை உள்ளதாகவும் அதன் பொருட்டு 2 புதிய முன்புற டயர்கள் (8.25X20) வாங்கி வழங்குமாறு தெரிவித்ததன் அடிப்படையில் 2 புதிய முன்புற டயர்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) அம்ரித்தா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ. 28000க்கும் 2) ரத்னா டயர்ஸ் பரமக்குடி என்ற நிறுவனம் ரூ. 28300க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். அதன் படி ரூ. 30000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ. 30000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.6 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதார டிப்பர் வாகனம் TN65 A6343க்கு வருடாந்திர தகுதி சான்று 05.12.2019 ந் தேதியுடன் முடிவடைவதாகவும் புதிதாக தகுதிச் சான்று பெறுவதற்கு பழுது பணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் பழுது பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) என்.கணபதி மோட்டார் ஓர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ. 95800க்கும் 2) செந்தில் மோட்டார் ஓர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ. 97700க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். அதன் படி ரூ. 98000 உத்தேச செலவினத்தில் |

| | |
|---|---|
| | சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ரூ. 98000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | பரமக்குடி நகராட்சி பகுதியில் அனைத்து வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வார்டு பகுதிகளிலும் பொதுக்கழிப்பறைகளும் சமுதாயக் கழிப்பறைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். பரமக்குடி நகராட்சியானது இது வரையிலும் மூன்று முறை திறந்தவெளி மலம் கழிப்பிடம் இல்லா நகரமென ( Open Defecation Free Certification) சான்று பெறப்பட்டுள்ளது. தற்பொது ODF+ Protocol Guidelines வழிகாட்டுதல்கள் கையேட்டின்படி அனைத்து வார்டு பகுதிகளிலும் திறந்தவெளி மலம் மற்றும் சிறுநீர் கழிப்பிட பகுதி இல்லை. எனவே ODF+வழிகாட்டுதல்கள் படி அனைத்து வார்டுகளிலும் உள்ள பள்ளிகளில் மாணவ மாணவியர்களிடமும், ஆசிரியர்களிடமும் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்களிடமும் மற்றும் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகளிடமிருந்தும் நாங்கள் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதற்கு திறந்தவெளியை பயன்படுத்தமாட்டோம் என்று உறுதிமொழி பெறப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களுக்கு திறந்தவெளி மல ஜலம் கழிப்பது ஒழித்தல் சம்மந்தமாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இந்நகராட்சி பகுதியை திறந்தவெளி மலஜலம் கழித்தலற்ற (ODF+) பகுதியாக அறிவிக்க செய்ய உள்ளது. இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக திறந்தவெளியில் மலஜலம் கழிப்பது ஒழித்தல் சம்மந்தமாக பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் உள்ளதா என கோருவதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிடுதவதற்கு ஆணையர் அவர்களின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிடுதவற்கு நகர்மன்றத்தின் எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | இந்நகராட்சி பொது சுகாதார காம்பாக்டர் வாகனம் TN65 AY3115–க்கு முன்புற, பின்புற டயர்கள் ( 8.25X20அளவு) முற்றிலும் தேய்மானம் அடைந்து விட்டதால் வாகனம் அடிக்கடி பஞ்சராகி வாகனத்தை இயக்கமுடியாத நிலையில் உள்ளதாகவும் அதன் பொருட்டு புதிதாக 6 டயர்கள் வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் 6 புதிய டயர்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) கண்ணன் டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ. 87,200க்கும் 2) ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.88,800க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். அதன்படி ரூ. 90,000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி டயர்கள் கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக் குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ. 90,000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி டயர்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

<table>
<tr>
<td>பொருள்.9</td>
<td>
நகர் மன்ற தீர்மான நாள் 30.11.2019ன்படி இந்நகராட்சி பொது சுகாதார டிப்பர் வாகனம் TN.65A6343 க்கு பழுது பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 19.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>பழுது பணிகள் விபரம்</th><th>என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி</th><th>செந்தில் மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td>1.</td><td>TN.65A6343 டிப்பர் வாகனத்திற்கு பழுது பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>ரூ.95800/–</td><td>ரூ.97700/–</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு
அலுவலகக் குறிப்பு–
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
</tr>
<tr>
<td>பொருள்.10</td>
<td>
இந்நகராட்சி பொது சுகாதார காம்பாக்டர் வாகனம் TN65 AY3115-க்கு பேட்டரி முற்றிலும் பழுதடைந்துள்ளதால் வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், அதன்பொருட்டு புதிய பேட்டரி வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் புதிய பேட்டரி கொள்முதல் செய்ய நகர் மன்றத்தின் பின்ஏற்பினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் 27.12.2019–ந் தேதியை முன் அனுமதியின் படி சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியத்தில் 30.12.2019 அன்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>விநியோகம் செய்ய வேண்டிய பொருட்கள்</th><th>என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி</th><th>செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1.</td><td>TN65 AY3115-க்கு புதிய பேட்டரி</td><td>9,900</td><td>9,950</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பேட்டரி விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு.
அலுவலகக் குறிப்பு–
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>குறைந்த தொகைக்கு பேட்டரி விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய என். கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
</tr>
</table>

<table>
<tr><td>பொருள்.11</td><td>நகர்மன்ற தீர்மான எண். நாள்.30.11.2019 ன் படி இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Hitachi இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தி சமப்படுத்திட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 11.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பணிகள் விபரம்</td><td>Exsernet,Madurai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி</td><td>EverGreen Environment Services, Ramnad என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி</td></tr>
<tr><td>1</td><td>கலவை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி சமப்படுத்திட ஒரு மணி நேரத்திற்கு</td><td>ரூ.1800</td><td>ரூ.1700</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய EverGreen Environment Services, Ramnad என்ற நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் பின் ஏற்பினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் 12.12.2019ந் தேதிய முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. தனி அலுவலர் அவர்களின் 12.12.2019ந் தேதிய முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>இந்நகராட்சி பொதுசுகாதார பொக்லைன் வாகனம் TN65AZ 2613–க்கு இரண்டு முன்புற டயர்கள் முற்றிலும் தேய்மானம் அடைந்துவிட்டபடியால் வாகனம் அடிக்கடி பஞ்சராகி வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் அதன்பொருட்டு இரண்டு புதிய முன்புற டயர்கள் வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஒட்டுநர் தெரிவித்ததன் அடிப்படையில் புதிய டயர்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் கணக்கிட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 1) சீனிவாசகன் டயர்ஸ் ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் ரூ.26310–க்கும் 2) ராயல் இன்ஜினியரிங் என்டர் பிரைசஸ், தொண்டியூர் என்ற நிறுவனம் ரூ.26500–க்கும் விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.<br>
அதன்படி ரூ. 27000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி டயர்கள் கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>
அலுவலகக் குறிப்பு–<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ரூ. 27000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி டயர்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.13</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் (மதுரை–மண்டபம் ரோடு) நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலை விரிவாக்கப் பணிகள் மற்றும் உயர்த்தி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதனால் இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோகம் செய்யப்படும் பம்பிங்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>மெயின் பைப்புகளுக்கு உரிய வால்வுகள் மற்றும் வால்வு தொட்டிகளை ( 4 எண்ணம்) மாற்றி அமைக்குமாறு நெடுஞ்சாலைத்துறை மூலம் கோரப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி சாலையில் உள்ள வால்வுகள் மற்றும் வால்வு தொட்டிகளை புதிதாக வேறு இடத்தில் மாற்றியமைக்கவும், தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மேற்படி குடிநீர் பணியின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு குடிநீர் விநியோக நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.14</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனம் டி.என்.65 டபிள்யூ 9658–ன் டயர்கள் நான்கு எண்ணமும் தேய்ந்து ஈப்பு வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளதால் அதற்கு புதிதாக நான்கு எண்ணம் புதிய டயர்கள் வாங்க தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 09.12.19ந்திதே உள்ளூர் நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்.
<table>
<tr><td>1)</td><td>ஸ்ரீ விநாயகா டயர் பாண்ட்<br>3/124, திருநகர், பரமக்குடி</td><td>ரூ.27200</td></tr>
<tr><td>2)</td><td>ஸ்ரீ மாணிக்கம் கம்பெனி<br>ஆட்டோமொபைல் டிவிசன், பரமக்குடி</td><td>ரூ.27600</td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு–<br>1) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயகா டயர் பாய்ண்ட், பரமக்குடி நிறுவனம், கொடுத்துளூள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால், மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேலும், உள்ளாட்சித் தேர்தல் அவசரத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி உத்தரவு வழங்கி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>இந்நகராட்சி அலுவலகத்தில் இங்கி வரும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் பழுது நீக்கம் செய்வதற்கும், 2019–2020ம் ஆண்டுக்கு வருடாந்திர பணிகள் மேற்கொள்ளவும், பராமரிப்பு பணிகள் தவிர பழுதடையும் உதிரிபாகங்கள் புதியதாக வாங்கி பொருத்தவும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,50,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.16</td><td>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் மழைநீர் அமைப்புகள் ஏற்படுத்தக்கோரி விளம்பரங்கள் செய்த வகையிலும், 14வது நிதிக்குழு பரிந்துரைத் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய வகையிலும் கீழ்கண்ட விபரப்படி கீழ்கண்ட நாளிதழ்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 1) | மதுரைமணி | ரூ.28576 | 14வது நிதிக்குழு ஒப்பந்தப்புள்ளி |
| 2) | தினத்தந்தி | ரூ.41580 | திட்டப்பணி பொங்கல் மலர் |
| 3) | தினமலர் | ரூ.17136 | திட்டப்பணி பொங்கல் மலர் |
| 4) | தமிழ்சுடர் | ரூ.13650 | மழைநீர் சேகரிப்பு விளம்பரம் |
| 5) | தினச்சங்கு | ரூ.5000 | திட்டப்பணி |
| 6) | தினகரன் | ரூ.15540 | திட்டப்பணி |
| 7) | தமிழ்முரசு | ரூ.14700 | திட்டப்பணி |

அலுவலகக் குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம், மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.17**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விபரங்களை தினசரி நாளிதழ்களின் தொழில் மலரில் விளம்பரங்களை வெளியிட்ட வகையில் கீழ்கண்ட நாளிதழ்களுக்கு கீழ்கண்டவாறு தொகைகளை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | தினத்தந்தி நாளிதழ் | ரூ.41580 |
| 2) | தினமலர் நாளிதழ் | ரூ.24582 |
| 3) | தினமணி நாளிதழ் | ரூ.31500 |
| 4) | தினச்செய்தி நாளிதழ் | ரூ.18900 |
| 5) | இந்து தமிழ் | ரூ.16000 |
| 6) | தினகரன் | ரூ.19601 |

அலுவலகக் குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம், மேற்கண்ட விபரப்படியான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.18**

இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.17349/2019/இ3 நாள்.16.10.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் சிப்பம் –1ன் கீழ் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு 12.11.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீடு ரூ.லட்சத்தில்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| 1 | **<u>சிப்பம் – I</u>**<br>மஞ்சள் பட்டிணம் மெயின் ரோடு (நகராட்சிப் பள்ளி சந்திப்பு முதல் தேனா புதுக்கோட்டை சாலை சந்திப்பு வரை), ஜீவா நகர் முதல் குறுக்குத் தெரு மற்றும் கிழக்கு தெரு, வி.பி.நகர், பர்மா காலணி ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் தளம் அமைத்தல் மற்றும் தர்மராஜபுரம், | 200.00 | 1)திருமதி.ஐ.குழந்தையம்மாள் ஒப்பந்ததாரர் 4.94% கூடுதல்<br><br>2) திரு.ஆர்.சீனிவாசகம் ஒப்பந்ததாரர் 6.60% கூடுதல் |

| | | | |
|---|---|---|---|
| | தேவராஜநகர், அண்ணாநகர்–குறுக்கு தெரு , சத்தியமூர்த்தி தெரு, மாதவன் தெரு , கன்னிசுந்தர் ராஜன் தெரு, எம்.ஜி,ஆர் நகர், பாண்டியன் தெரு–குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் பேவர் கல் தளம் அமைத்தல் மற்றும் வடிகால் அமைத்தல் (வார்டு எண்.1,8,9,28,30,31) | | |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.94% கூடுதலாகவும், , திரு. ஆர்.சீனிவாசகம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 6.60 % கூடுதலாக இருப்பதாலும் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரர்களுக்கு வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டதாலும், மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.94 சதவீதம் கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

பொருள்.19

இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.17349/2019/இ3 நாள்.16.10.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் சிப்பம் –1ன் கீழ் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு 12.11.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | <u>சிப்பம் – II</u><br>பொன்னையாபுரம் , ஈஸ்வரன் கோவில் 4வது தெரு, மாமங்க தெப்பக்குளம் குறுக்குத் தெரு, கிறிஸ்துவகாலனி கிழக்கு முதல் தெரு, கள்ளழகர் தெரு ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்தல் மற்றும் புது நகர் 2,3,4,5 வது குறுக்குத் தெருக்கள், வைகை நகர்–11 மற்றும் 12வது குறுக்குத் தெரு, பாலன் நகர் முதல் தெரு, காளிதாஸ் பள்ளிதெரு, கிரி அம்பலம் நாராயணன் தெரு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல் மற்றும் வடிகால் அமைத்தல் ( வார்டு எண்.27,28,4,2,8,15 மற்றும் 14) | 200.00 | 1)திருமதி.ஐ.குழந்தையம்மாள் ஒப்பந்ததாரர் 4.97% கூடுதல்<br><br>2) திரு.ஆர்.சீனிவாசகம் ஒப்பந்ததாரர் 7.27% கூடுதல் |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.97% கூடுதலாகவும், , திரு. ஆர்.சீனிவாசகம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 7.27% கூடுதலாக இருப்பதாலும் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரர்களுக்கு வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டதாலும், மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.97சதவீதம் கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |
| பொருள்.20 | இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.17349/2019/இ3 நாள்.16.10.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் சிப்பம் –1ன் கீழ் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு 12.11.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | **<u>சிப்பம் – III</u>** <br> எமனேஸ்வரம் பள்ளிவாசல் தெரு, சிங்காரத் தோப்பு மெயின் ரோடு, பெருந்தேவி நகர் குறுக்குத் தெருக்கள், கோகுலர் தெரு, நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் ரோடு, அய்யாத்துரை தெரு கிழக்கு, கீழத்தெரு, காட்டுப்பரமக்குடி, சர்ச் ரோடு, தெய்வேந்திர நகர் மெயின் ரோடு, ஜீவா நகர் 2–வது குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் தளம் அமைத்தல் மற்றும் முசாபர்கனி தெரு, ஜீவா நகர் மெயின் ரோடு மேற்கு முதல் குறுக்குத் தெரு, கக்கன் நகர், மட்டா மன்னா பாகவதர் சந்து, முனியாண்டிபுரம் , காட்டுப்பரமக்குடி, ஆதிதிராவிடர் காலனி மேற்கு குறுக்குத் தெரு, கௌளி அம்மன் கோவில் –குறுக்கு தெரு, எஸ்.எஸ். காலனி, காந்தி நகர் கடைசி தெரு, பாரதியார் தெரு, காமராஜர் தெரு கிழக்கு ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்தல் ( வார்டு எண்.3,32,21,19,24,2,8,36,29,25,26) | 200.00 | 1)திருமதி.ஐ.குழந்தையம்மாள் ஒப்பந்ததாரர் 4.97% கூடுதல் <br> 2) திரு.ஆர்.சீனிவாசகம் ஒப்பந்ததாரர் 5.63% கூடுதல் |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.97 % கூடுதலாகவும், , திரு. ஆர்.சீனிவாசகம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 5.63 % கூடுதலாக இருப்பதாலும் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரர்களுக்கு வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டதாலும், மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.97 சதவீதம் கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.